செய்தி வெளியீடு எண் : 1413 நாள் : 17.07.2023

<u>செய்தி வெளியீடு</u>

**வேலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தை மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின்.அவர்களும் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.**

வேலூர் மாவட்டம் காட்பாடியில் அமைந்துள்ள மாவட்ட பல்நோக்கு விளையாட்டு வளாகத்தை மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திருஉதயநிதி ஸ்டாலின் அவர்க.ளும் இன்று (17.07.2023) பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் காட்பாடியில் 36.68 ஏக்கர் பரப்பளவில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைந்துள்ளது. இவ்விளையாட்டு வளாகமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.03.2022 அன்று திறந்து வைக்கப்பட்டு விளையாட்டு வீரர்கள் பயனடையும் வகையில் பயன்பாட்டில் உள்ளது.

இவ்விளையாட்டு வளாகத்தில் 46737 சதுர அடியில் பார்வையாளர் மாடம் மற்றும் நிர்வாக அலுவலகமும், பல்வேறு விளையாட்டு ஆடுகளமும் அமைக்கப்பட்டுள்ளது. நிர்வாக அலுவலக கட்டிடத்தின் தரை தளத்தில் மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் அலுவலகம், உடற்பயிற்சி அறை, ஆண்கள் மற்றும் பெண்கள் தங்கும் அறை, சமையல் அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது. முதல் தளத்தில் 1500 பேர் அமரக்கூடிய மேற்கூறையுடன் பார்வையாளர் மாடம் (மாற்றுதிறனாளிகளுக்கான தனி இடவசதியுடன்) அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், வெளிப்புற மைதானத்தில் 8 வழிகள் கொண்ட 400மீ தடகள ஓடுபாதை, சுற்றுச்சுவருடன் கூடிய 6 வழிகள் கொண்ட நீச்சல் குளம், கால்பந்து, வளைகோல்பந்து மைதானம் மற்றும் கூடைப்பந்து, கையுந்துபந்து, கபாடி, கோ–கோ, டென்னிஸ் ஆடுகளமும் ஆகியவை அமைந்துள்ளது .

இதர வசதிகளாக இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம், இரண்டு ஆழ்துளைக் கிணறுகள், இணைப்புச்சாலை மற்றும் பொது கழிப்பறை வசதி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு வசதிகளாக முறையான மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதி, மாற்றுதிறனாளிகளுக்கான கழிப்பறை மற்றும் சாய்தளம், இரவு நேரங்களில் நிகழ்ச்சியை நடத்துவதற்கான உயர் மின் விளக்கு, சாலை ஓரம் மின் விளக்கு வசதிகள் உள்ளன.

இவ்விளையாட்டு வளாகத்தை இன்று பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திருஉதயநிதி . ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களின் ஆலோசனையின் பேரில் விளையாட்டு வளாகத்திற்கான சுற்றுச்சுவர், மாணவர்கள் தங்கும் விடுதி, உட்புற சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து விளையாட்டு வளாகத்தில் அமைந்துள்ள நீச்சல் குளத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்து நீச்சல் குளத்தில் நீர் நிரப்புவதற்கு விளையாட்டு

மைதானத்தில் இதர தேவைகளுக்காகவும், ஆழ்துளை கிணறு அமைப்பது குறித்தும் அலுவலர்களுடன் ஆலோசித்தார்.

பின்னர், விளையாட்டு வளாகத்தில் ரூ.10.81 கோடி மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உள்விளையாட்டு அரங்கை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த உள்விளையாட்டு அரங்கில் அமைக்கப்பட்டுள்ள மாநாட்டு கூடம், உடற்பயிற்சி மையம், மேற்கூரையுடன் கூடிய பார்வையாளர் மாடம் ஆகியவற்றை பார்வையிட்டார். இந்த உள்விளையாட்டரங்கம் கட்டுமான பணிகள் முழுவதும் முடிவுற்று பயன்பாட்டில் தயார்நிலையில் உள்ளதாக அலுவலர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே. எஸ். மஸ்தான் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.து.மு.கதிர் ஆனந்த், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு.பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஏ.பி.நந்தகுமார், திரு.ப.கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா ஆனந்த குமார், துணை மேயர் திரு.சுனில் குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திரு.மு.பாபு, மாநகராட்சி ஆணையாளர் திரு.பி.ரத்தினசாமி,இ.ஆ.ப., உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in